கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள், வியாழக்கிழமை
அசல் வழக்கு எண்.16/2025
CNR No.TNMD130003542024
* * * *

பஞ்சாப் நேஷனல் வங்கி,
திருப்பரங்குன்றம் கிளை,
அதன் கிளை மேலாளர் மூலம் ... வாதி

/ எதிர்/

செல்வி.S.பாண்டிச்செல்வி ... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 18.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.காசிராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமான உத்தரவு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

வாதி வங்கிக்கு பிரதிவாதி ரூ.80,949.55/–க்கு பிராது தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரை 12.70% ஆண்டு வட்டியுடனும் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) பிராதின் சுருக்கம் : –

1.1) இவ்வழக்கின் பிரதிவாதி, வாதி வங்கியிடம் அவரது தொழில் அபிவிருத்தி செய்வதற்காக (PMMY) பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.2,00,000/–க்கு கடன் கேட்டு விண்ணப்பித்ததாகவும் அதனை வாதி வங்கியானது பெற்றுக்கொண்டு கடந்த 18.03.2021ம் தேதியன்று நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி கடிதம் வழங்கியதில் இந்நிர் பிரதிவாதியும் மேற்படி நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துக்கொடுத்தன் அடிப்படையில், இந்நிர் பிரதிவாதி, வாதி வங்கியிடமிருந்து ரூ.2,00,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி கடன் தொகைக்கு வாதி வங்கிக்கு குறைந்தபட்ச வட்டியான ஆண்டிற்கு 8.30% வட்டியுடன் மாதம் ஒருமுறை கூடும் கூட்டுவட்டியுடன் 84 மாத தவணைகளில்,

மாதம் ரூ.3,149.62/- மற்றும் பின்வட்டியுடன் திருப்பி செலுத்த மேற்படி பிரதிவாதி ஒப்புக்கொண்டும், அது தவிர இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவின்படி அவ்வப்போது மாறுபடும் கூடுதல் வட்டி விகிதத்தின் படியும் கடன் தொகையை திருப்பி செலுத்தவும், அவ்வாறு மேற்படி கடன் தொகை மாததவணைகளில் செலுத்த தவறும்பட்சத்தில் மொத்த பாக்கித்தொகைக்கு 2% கூடுதல் வட்டியுடன் திருப்பிச்செலுத்தவும் இந்நிர் பிரதிவாதி ஒப்புக்கொண்டார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

1.2) மேலும், இந்நிர் பிரதிவாதி மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக மேற்படி வாதி வங்கிக்கு கடந்த 18.03.2021ம் தேதியன்று கையொப்பமிட்ட கால கடனுக்கான சொத்துக்களின் அடமானம் (Hypothecation of Assets to secure term loan) ஒன்று எழுதிக்கொடுத்தும், கடந்த 14.08.2023ம் தேதியன்று கடன் நிலுவை ஒப்புதல் கடிதம் ஒன்று எழுதிக்கொடுத்தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.3) இந்நிலையில், இந்நிர் பிரதிவாதி வாதி வங்கிக்கு மேற்படி கடன் தொகையை செலுத்தி வந்த நிலையில், மேற்கொண்டு பிரதிவாதி, வாதி வங்கிக்கு கடன் தொகையை செலுத்த முன்வராத காரணத்தால் மேற்படி கடன் பாக்கித்தொகையை வாதி வங்கி பலமுறை

பிரதிவாதியிடம் கேட்டும் திருப்பி செலுத்தவில்லை என்பதால் 08.11.2024ம் தேதியன்று வாதி வங்கியிலிருந்து பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், மேற்படி அறிவிப்பினை பிரதிவாதியும் கடந்த 11.11.2024ம் தேதியன்று பெற்றுக்கொண்டும் கடன் தொகையை செலுத்த முன்வரவில்லை என்றும், எனவே அசல் வழக்கானது இந்நிர் பிரதிவாதிக்கு எதிராக வாதி வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

2) பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 28.02.2025ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

<u>3) இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனைகள் என்னவெனில்?</u>

1) அசல் வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

2) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

4) வாதி தரப்பு சாட்சியம் :–

வாதி தரப்பில், வாதி வங்கி கிளையின் மேலாளர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) வாதி தரப்பு வாதுரை :–

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலமாகவும், அவர் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் வாதி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்துவிட்டதாகவும், எனவே வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரங்களை அவருக்கு வழங்கவேண்டும் எனவும் வாதம் செய்தார்.

6) பிரச்சனை 1–க்கான தீர்வு :–

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

6.1) வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்று பரிசீலிக்கையில், இவ்வழக்கில் பிரதிவாதி தோன்றதரப்பினராக இருந்து வந்தபோதிலும் வாதி வழக்கினை வாதியே சாட்சி, சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவேண்டும் என்பது நிலையான சட்டநடைமுறையாகும்.

6.2) இவ்வழக்கின் பிரதிவாதி, வாதி வங்கியில் தனது தொழில் அபிவிருத்திக்காக கடந்த 18.03.2021ம் தேதியன்று விண்ணப்பம் கொடுத்து மேற்படி விண்ணப்பமானது வாதி வங்கியால் அனுமதிக்கப்பட்டும், மேற்படி கடன் தொகைக்கு ஆண்டு வட்டியாக 8.30% வட்டியுடன் மாதம் ஒருமுறை கூடும் கூட்டுவட்டியுடன் 84 மாத தவணைகளில், மாதம் ரூ.3,149.62/- மற்றும் பின்வட்டியுடன் திருப்பி செலுத்த மேற்படி பிரதிவாதி ஒப்புக்கொண்டும், கடந்த 14.08.2023ம் தேதியன்று மேற்படி கடன் நிலுவையினை ஒப்புக்கொள்ளும்விதமாக கடதம் ஒன்றை எழுதிக்கொடுத்ததாகவும், ஆனால் மேற்படி நிபந்தனைகளின் படி இந்நிர் பிரதிவாதி நடந்துக்கொள்ளாமலும், கடன் தொகையை முறையாக செலுத்தாமலும் இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

6.3) அதன்படி, வாதியானவர் தனது வழக்கினை நிரூபணம் செய்யும்பொருட்டு, இந்நிர் பிரதிவாதி, வாதி வங்கியிடம் மேற்படி கடன் தொகை கேட்டு விண்ணப்பித்தற்கான 18.03.2021ம் தேதியிட்ட அனுமதி கடிதம் வா.சா.ஆ.1 ஆகவும், மேற்படி கடன் தொகைக்கு ஈடாக அன்றையதினமே பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த காலகடனை பெறுவதற்கான சொத்துக்களின் அடமானம் வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி கடன் தொகையின் நிலுவைத்தொகையினை உறுதிசெய்யும் கடிதம் வா.சா.ஆ.3 ஆகவும், ஆனால் மேற்படி வாதி வங்கியின் நிபந்தனைகளை இந்நிர் பிரதிவாதி நிறைவேற்றாமலும், கடன் தொகையை செலுத்தாமலும் இருந்து வந்ததால் வாதி வங்கியால் இந்நிர் பிரதிவாதிக்கு 08.11.2024ம் தேதியன்று அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை இந்நிர் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5 ஆகவும், மேலும் இந்நிர் பிரதிவாதியின் கடன் நிலுவையைக்காட்டும் வங்கி கணக்கு புத்தக நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6.4) எனவே, வாதி தரப்பில், வாதி வங்கியிடமிருந்து பிரதிவாதி தனது தொழில் அபிவிருத்திக்காக ரூ.2,00,000.00/-ம் கடன்

வாங்கியுள்ளார் என்பதையும், அதன்படி, வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி வாதி வங்கிக்கு பிரதிவாதி 31.10.2024–ல் ரூ.79,810.99/– தரவேண்டியது என்றும், அது பின்வட்டியுடன் ரூ.80,949.55/–ஆக நிலுவையில் உள்ளது என்பதும், அதன்படி, வாதி வங்கிக்கு முழுமையாக பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி கடனை பிரதிவாதி முழுமையாக செலுத்த தவறியுள்ளதை சாட்சி, சான்றாவணங்களின் மூலம் வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதன்படி, வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 1–க்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

<u>7) பிரச்சனை 2–ற்கான தீர்வு : –</u>

2. வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

இவ்வழக்கின் வாதி கோரியுள்ள பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று பிரச்சனை –1 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று பிரச்சனை 2க்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதி வங்கியின் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, தாவா கடன் தொகையான ரூ.80,949.55/–ஐ பிரதிவாதி, வாதியின் வங்கிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து இத்தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் வரை வருடத்திற்கு 12.70% ஆண்டு வட்டியுடனும், அதன்பின்னர் மேற்படி கடன் தொகை முழுவதும் கொடுத்து பைசலாகும் வரை அசல் தொகை ரூ.80,949.55/–க்கு ஆண்டுக்கு 6% பின்வட்டியுடனும் சேர்த்து செலுத்தவேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 26.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.26 17:48:53 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

<u>**இணைப்பு**</u> :–

1. <u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :–

வா.சா.1. – ரமேஷ்கண்ணன் (பஞ்சாப் நேஷனல் வங்கி,
திருப்பரங்குன்றம் கிளை, கிளைமேலாளர்)

2. **வாதி தரப்பு சான்றாவணங்கள்** :–

வா.சா.ஆ.1.	18.03.2021ம் தேதியிட்ட அனுமதிக்கடிதம் – அசல்
வா.சா.ஆ.2.	18.03.2021ம் தேதியிட்ட பிரதிவாதியால் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கால கடனை பெறுவதற்கான சொத்துக்களின் அடமானம் – அசல்
வா.சா.ஆ.3.	14.08.2023ம் தேதியிட்ட நிலுவைத்தொகையை உறுதி செய்யும் கடிதம் – அசல்
வா.சா.ஆ.4.	08.11.2024ம் தேதியிட்ட வாதி வங்கியால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல்
வா.சா.ஆ.5.	11.11.2024ம் தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல்
வா.சா.ஆ.6.	07.11.2024ம் தேதியிட்ட வங்கி கணக்குப்பட்டியல் – அசல்

3. **பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** : இல்லை

4. **பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

5. **நீதிமன்ற சாட்சிகள்** : இல்லை.

6. **நீதிமன்ற சான்றாவணங்கள்** : இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.26 17:49:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.16/2025
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 26.03.2026